8108574

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.) **Under Section 173, BNSS**

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

1. District மாவட்டம் Chennai PS காவல்நிலையம் V & AC, CC-V Year ஆண்டு FIR No. முதக எண் C 2/2024/AC/CC-V Date நாள் 25.09.2024

2. (i) Act சட்டம் Prevention of Corruption Sections பிரிவுகள் 7
(ii) Act சட்டம் Act 1988 as amended Sections பிரிவுகள்
(iii) Act சட்டம் in 2018. Sections பிரிவுகள்
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 20.9.2024 Date to நாள் வரை :
Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : 13.30hrs Time to நேரம் வரை :
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time நேரம் 17.10hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் on 25.09.2024
registration of FIR

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக written - Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எல்லை தூரமும், திசையும் Around 13 kms
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o. The Conservancy Inspector, Greater Chennai Corporation, Zone-5, Ward-59, Memorial Hall Road, Park Town, Chennai-3
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S. District
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையின் அந்த காவல் நிலைய பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : புகார்தாரர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. K. Baskar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Krishnan
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் Sanitary worker, Chennai Corporation (g) Address முகவரி No. 21/41, Thiruvalluvar Nagar, 2nd Street, Korukkupettai, Chennai-600 021

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றவாளிகளின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Thirumal Rao, Conservancy Inspector, Greater Chennai Corporation, Zone-5, Ward-59, Unit-14, Memorial Hall Road, Park Town, Chennai-3.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
புகார்தாரர் / தகவல் கொடுப்பவர் முறையீட்டில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

GCP-240-34(Type-2) 90,000 Cpy -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................. Rank .................. to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே தந்த முதலறிக்கை உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுகளுக்கான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுகிறது .................. பதவி .................. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லைக் கருதி புலனாய்வுக்கு .................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் தகவல் அறிக்கை குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக பதிவுசெய்யப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

25/04/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

K. BINDHU

15. Date & Time of despatch to the court 25.04.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..................
Rank: நிலை Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Chennai City-V,
Alandur, Chennai - 16.

* GCP-243 34(Type-2) [illegible] Cps -21 3 16(P)CL-12|p 2

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை நகரப்பிரிவு-5 குற்ற எண். 02/ 2024 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் கலம் எண்.12 ன் தொடர்ச்சி பின்வருமாறு.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது. 24.09.2024-ந் தேதி மாலை 17.10 மணியளவில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-5 ன் காவல் ஆய்வாளராகிய நான் மேற்சொன்ன அலுவலகத்தில் பணியில் இருந்தபோது சென்னை, கொருக்குப்பேட்டை, திருவள்ளுவர் நகர் 2 வது தெரு, எண்.21/41, என்ற முகவரியில் வசித்து வரும் திரு. K.பாஸ்கர், த/பெ.K.கிருஷ்ணன், என்பவர் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை நகரப்பிரிவு-5 அலுவலகம் வந்து காவல் ஆய்வாளராகிய ஆகிய என்னிடம் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து மூலமான புகாரை கொடுத்தார். நான் அந்த புகாரை பெற்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து புகார் மனு தொடர்பாக மறைமுகமாக ரகசிய விசாரணை மேற்கொண்டேன். புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-5 வார்டு எண்-59, பகுதி-14 ன் கன்சர்வன்சி ஆய்வாளர் திரு.திருமல் ராவ் மற்றும் வாதி திரு.பாஸ்கர் ஆகியோர்களின் முன் நடத்தையையும் புகார் மனுவின் உண்மை தன்மையையும் ரகசிய விசாரணை மேற்கொண்டேன். எனது ரகசிய விசாரணையில் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டிற்கு முகாந்திரம் இருப்பதால் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்களது அனுமதி பெறப்பட்டு புகார் மனுவின் தன்மைக்கேற்ப ஊழல் தடுப்பு சட்டம் 1988 திருத்தப்பட்ட ஊழல் தடுப்பு திருத்த சட்டம் 2018 ன் படி சட்டப்பிரிவு 7 ன் படி இன்று 25.09.2024 காலை 07.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர் K.பாஸ்கர், த/பெ. K.கிருஷ்ணன், எண்.21/41, திருவள்ளுவர் நகர் 2 வது தெரு, கொருக்குப்பேட்டை, சென்னை-600 021. பெறுநர்

25/09/2024

காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத் துறை, ஆலந்தூர், சென்னை. அய்யா, நான் கொருக்குப்பேட்டை, திருவள்ளுவர் நகரில் கடந்த 7 வருடங்களாக குடும்பத்துடன் வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். நான் கடந்த 2010 ம் வருடம் முதல் சென்னை கார்ப்பரேசனில் மண்டலம்-5, வார்டு-59, பகுதி-14 ல் நிரந்தர சாலை பணியாளராக பணியில் சேர்ந்து, தற்போது குப்பை லாரியில் ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த மூன்று வருடமாக எனது உயர் அதிகாரியாக திரு.திருமல் ராவ், கன்சர்வன்சி இன்ஸ்பெக்டர் அவர்கள் பணிபுரிந்து வருகிறார். அவரின் கீழ் என்னைப் போன்று சுமார் 40 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். எனக்கு கண்பார்வை மங்கியதால் மருத்துவமனை சென்று டெஸ்ட் எடுத்ததில் தலையில் கட்டி இருப்பதாகவும் அதை ஆப்ரேசன் செய்து அகற்ற வேண்டும் என்று மருத்துவர் கூறியதால் ஆப்ரேசன் செய்வதற்காக, மருத்துவ விடுப்பில் செல்வதாக திரு.திருமல் ராவ், கன்சர்வன்சி இன்ஸ்பெக்டர் அவர்களை நேரில் பார்த்து சொல்லிவிட்டு சென்றேன். கடந்த 18.06.2024 ம் தேதி ஸ்டான்லி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 24.06.2024 ம் தேதி ஆப்ரேசன் முடித்து 03.07.2024 ம் தேதி டிஸ்சார்ஜ் ஆனேன். மறுபடியும் தலையில் சீல் கோர்த்து இருந்ததால் 05.07.2024 ம் தேதி முதல் 02.08.2024 வரை உள் நோயாளியாக ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். மருத்தவர் 6 வார காலம் ஓய்வில் இருக்கும்படி ஆலோசனை கூறினார். நான் ஓய்வு முடித்து கடந்த 01.09.2024 ம் தேதி மீண்டும் பணியில் சேர்ந்தேன். என் உடல்நிலை முழுவதுமாக சரியாகாத காரணத்தால் என்னால் குப்பை லாரியில் சென்று வர சிரமமாக இருந்ததால் ஏதாவது லைட் டியூட்டியாக கேட்டு பெற்றுக்கொள்ள வேண்டி எனது மேலதிகாரியான திரு.திருமல் ராவ், கன்சர்வன்சி இன்ஸ்பெக்டர் அவர்களிடம் 20.09.2024 ம் தேதி சுமார் மதியம் 1.30 மணியளவில் சென்று கேட்டபோது, உனக்கு

25/09/2024.

லைட் டியூட்டி வேண்டுமென்றால் மாதா மாதம் ரூபாய் 6000/- தனக்கு தர வேண்டும் என்றும், தற்போது முன்பணமாக ரூபாய் 2000/- கொடுக்க வேண்டும் என்று கூறினார். மேற்படி லஞ்சபணத்தை 25.09.2024 ம் தேதி காலை 10.00 மணிக்கு தனது அலுவலகத்தில் தன்னிடம் கொடுக்கும்படி கூறினார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. என்னிடம் லஞ்சம் கேட்ட கன்சர்வன்சி இன்ஸ்பெக்டர் திரு.திருமல் ராவ் மீது நடவடிக்கை எடுக்க அவர்கேட்ட லஞ்சப்பணம் ரூபாய் 2000/- த்தை வைத்துள்ளேன். அவர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இந்த புகார் மனுவை இன்று 24.09.2024 ம் தேதி மாலை 5 மணிக்கு கொடுக்கிறேன். இப்படிக்கு Sd/xxxxx (K Baskar) 24.09.2024

Sir, received the above complaint on 24.09.2024 at 17.10 hrs and conducted discreet enquiry on the complaint. The discreet enquiry revealed that the complaint is genuine and accused is having bad reputation and after getting permission from the higher officers, registered a case in V&AC, Chennai City-V Cr.No.02/2024/AC/CC-V u/s 7 of the Prevention of Corruption Act 1988 amended by the Prevention of Corruption Act 2018 on 25.09.2024 at 07.00 hrs. Sd/- (K.BINDHU), Inspector of Police, V&AC, CC-V, Chennai 16. The original FIR along with the complaint was sent to the Honorable Special Court for cases under Prevention of Corruption Act, Chennai and other copies submitted to the officers concerned.

25/09/24

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Chennai City-V,
Alandur, Chennai - 16.